பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | புரட்டாதி 10 | புதன்கிழமை | 27.09.2023 | அதிர்வு 57

## விமானப்படைச் சிப்பாய் வெடி விபத்தில் மரணம்

புத்தளம், கற்பிட்டி – கந்தக்குளியில் உள்ள விமானப்படைக்குச் சொந்தமான துப்பாக்கி பயிற்சி முகாமில் நேற்று மாலை வெடிப்புச் சம்பவமொன்று இடம் பெற்றுள்ளது.

இந்த வெடி விபத்தில் 02

# போர்க்குற்றவாளிகளுக்குப் பதவிகளை பரிசாக வழங்கியுள்ளது இலங்கை அரசு

## பொறுப்புக்கூறலை வலியுறுத்தி அமெரிக்க காங்கிரஸ் கடிதம்

சித்திரவதைகளுக்கு எதிரான உடன்படிக்கையின் கீழ் இலங்கை பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துமாறு அமெரிக்க காங்கிரஸின் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சியின் 12 உறுப்பினர்கள் அந்நாட்டு இராஜாங்கச் செயலாளர் அட்டனி பிலிங்கனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை இராணுவம் மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் மூலம் தமிழ் மக்கள் எதிர்நோக்க நேரிட்ட மிலேச்சன சித்திரவதைகள் தொடர்பாக பிரதான கவனத்தைச் செலுத்தி அவர்கள் இராஜாங்கச் செயலாளருக்குக் கடிதத்தை அனுப்பி இந்தக் கோரிக்கையை 05

# இலங்கையில் இனப்படுகொலை ஒருபோதும் இடம்பெறவில்லை!

## பயங்கரவாதிகளின் புகலிடமே கனடா என்று குற்றஞ்சாட்டுகின்றார் அலி சப்ரி

இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றது என்று கனடா கூறுவது முற்றிலும் உண்மைக்குப் புறம்பான விடயமாகும் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இலங்கையைப் போன்றே தற்போது எந்தவித ஆதாரமும் இன்றி சில குற்றச்சாட்டுக்களை இந்தியா மீதும் கனடா முன்வைத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். 02



# நல்லூரில் நினைவேந்தலை குழப்ப முயன்ற பொலிஸார்



தியாக தீபத்தின் நினைவிடத்தில் நேற்று மக்கள் அஞ்சலி செலுத்திக்கொண்டு இருந்தமையால் அவ்வீதி ஊடான போக்குவரத்தை மாற்று வீதி வழியாக மாற்றி போக்குவரத்து ஒழுங்குகளைச் செய்தவர்களைப் பொலிஸார் மிரட்டி அஞ்சலி நிகழ்வு இடம்பெறும் இடத்தின் ஊடாக போக்குவரத்தை மேற்கொள்ள வாகனங்களை அனுமதித்தனர்.

அத்துடன் தாமும் பொலிஸ் வாகனத்தில் அஞ்சலி நிகழ்வு 02

# சர்வதேச விசாரணை தேவையில்லையாம்

## நியாயப்படுத்துகின்றது ஐக்கிய தேசியக் கட்சி



"உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் விசாரணையை மேற்கொள்ள உள்நாட்டில் சிறந்த விசாரணை அதிகாரிகள் இருக்கும்போது அதனைச் சர்வதேச விசாரணைக்குக் கொண்டு செல்லத் தேவையில்லை. குண்டுத் தாக்குதல் தொடர்பாக ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட 02




ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசு பிரேரித்துள்ள இரண்டு சட்டமூலங்கள் தொடர்பில் அரசுக்கு எதிராக உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் கடும் எதிர்ப்புக் கிளம்பி வருகின்றது.

அவை இரண்டையும் நிறைவேற்றுவதற்கு ரணிலின் அரசு மிகக் கடுமையான எதிர்ப்பை நாடாளுமன்றத்துக்குள் எதிர்நோக்கப் போவது நிச்சயம். அதை ஒட்டி அரசாங்கத்தின் கால் சறுக்கினாலும் 02

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஆச்சரியப்படுவதற்கில்லை.

அண்மைக் காலத்தில் முக்கிய சட்டமூலங்கள், பிரேரணைகள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் அரசுக்குக் கிட்டிய ஆதரவை நோக்கும்போது அரசு பெரும்பான்மையை மட்டுமட்டாகவே தக்க வைத்துக் கொண்டிருப்பது தெளிவாகத் தெரியும்.

இந்தச் சமயத்தில் வரவு – செலவுத் திட்டம் வேறு வருகின்றது. அதையும் சாதாரண பெரும்பான்மையுடனாவது எப்படியும் நிறைவேற்றி முடிக்க வேண்டிய கட்டாயம் ரணிலின் அரசுக்கு.

போதாக்குறைக்கு அடுத்து வரும் நாள்களில் அல்லது வாரங்களில் ஓர் அமைச்சரவை மாற்றத்திற்கு ஜனாதிபதி தயாராகி வருகின்றார் என்று கூறப்படுகின்றது. அதன் விளைவாகவும் ஆட்சி தரப்புக்குள் வெடிப்புகள் கிளம்பி, வெளியேற்றங்களுக்கு வாய்ப்பு இருப்பதாகக் கணிக்கப்படுகின்றது.

இந்தச் சூழலில்தான் இரண்டு முக்கிய சட்டமூலங்கள் தொடர்பில் அக்கினிப் பரீட்சை நடத்த ஜனாதிபதி ரணில் தயாராகின்றார் என்கின்றனர் தென்னிலங்கை ஊடக நண்பர்கள்.

அந்தச் சட்ட மூலங்களில் ஒன்று பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம். மற்றையது ஒன்லைன் பாதுகாப்புச் சட்டம்.

ஏற்கனவே நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதாக நாட்டுக்கும் சர்வதேசத்துக்கும் வாக்குறுதி அளித்த – மாறி, மாறி வந்த – இலங்கை அரசுகள், பல தசாப்தங்களாக அதனைச் செய்யாமல் இழுத்தடித்து வருகின்றன. இப்போது மாற்றாக, பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தை ரணிலின் அரசு கொண்டு வருகின்றது.

இது, கடைசியில் சட்டியில் இருந்து அடுப்பில் விழுந்த கதையாகிவிடும், அவ்வளவு மோசமாக இந்த இரு சட்ட மூலங்களுமே உள்ளன என்று சுயாதீன வட்டாரங்கள் வெளிப்படையாகவே விமர்சிக்கின்றன.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் இந்தச் சட்ட மூலங்களைக் கடுமையாக விமர்சித்திருக்கின்றது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றுவது தொடர்பாகத் தாங்கள் சமர்ப்பித்த பரிந்துரைகள் சீண்டப்பட கூட இல்லை என்பது அந்தச் சங்கத்தின் ஆதங்கம்.

இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் சில திருத்தங்களை நகாசு வேலையாக கொண்டு வந்து நிறைவேற்றிய – முன்னாள் கோட்டாபய அரசில் வெளிவிவகார அமைச்சராக இருந்து, அந்தத் திருத்தங்களை ‘அரசுடன் சேர்ந்திருந்த குற்றத்திற்காக’ நியாயப்படுத்திய பேராசிரியர் ஜி.எல்.பிரிஸும் இப்போதைய புதிய சட்டமூலங்கள் இரண்டையும் கடுமையாக எதிர்க்கின்றார்.

அண்மைக்காலத்தில் பிரேரிக்கப்பட்ட மிக மிக மோசமான சட்டம் மூலங்களில் முக்கியமானது இந்த ஒன்லைன் பாதுகாப்புச் சட்டம் மூலம் என்கிறார் அவர்.

“எல்லாவற்றிக்கும் மேலாக இன்று அரசு நாட்டு மக்களைக் கண்டு அஞ்சுகின்றது. அதனால்தான் தொடர்ந்து தேர்தல்களை தள்ளிப் போட அது முனைகின்றது. அவமானகரமான தோல்வி தமக்குக் கிட்டும் என்பதால் தேர்தலைக் கண்டு அவர்கள் (அரசுத் தரப்பினர்) அஞ்சுகின்றனர்” என்கிறார் பீரிஸ்.

மேற்படி இரு சட்டமூலங்களுக்கும் எதிராக நாட்டில் சத்தம் சந்தடியின்றி கிளர்ந்து வரும் எதிர்ப்பு நாடாளுமன்றத்திலும் ரணிலின் அரசை மிக விரைவில் உலுப்பினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

## விமானப் படைச் சிப்பாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
இலங்கை விமானப்படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## நல்லூரில் நினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இடம்பெறும் பகுதியில் சுற்றித் திரிந்து நிகழ்வுகளில் குழப்பங்களை ஏற்படுத்த முயற்சித்ததுடன், மக்கள் நெரிசல் காணப்பட்ட இடத்தால் வாகனத்தைச் செலுத்தி மக்கள் மத்தியில் பயத்தை ஏற்படுத்த முயன்றனர்.

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வின் இறுதி நாளான நேற்று யாழ்ப்பாணம் – பருத்தித்துறை வீதியில் நல்லூர் ஆலயத்துக்கு அருகில் உள்ள திலீபனின் நினைவிடத்தில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

கொட்டும் மழைக்கு மத்தியில் ஆயிரக்கணக்கான மக்கள் நினைவிடத்தில் கூடி அஞ்சலி செலுத்தினர். அதனால் நினைவிடத்தை அண்மித்த வீதியில் பெருமளவான மக்கள் காணப்பட்டமையால் அந்த வீதி ஊடாக வந்த வாகனங்களை மற்றைய மாற்று வீதியூடாகச் செல்ல அங்கிருந்த சிலர் வழி வகுத்தனர்.

அவ்வேளை அங்கு வந்த பொலிஸார் போக்குவரத்தை மக்கள் குவிந்துள்ள வீதி ஊடாகவே மேற்கொள்ளுமாறு வாகனச் சாரதிகளுக்கு பணித்ததுடன் அங்கிருந்து போக்குவரத்து ஒழுங்குகளை செய்த இளைஞர்களையும் அவ்விடத்தில் இருந்து அச்சுறுத்தி அகற்றினர்.

இருந்த போதிலும் பெரும்பாலான சாரதிகள் தாங்களாகவே அஞ்சலி நிகழ்வு இடம்பெறும் வீதியைத் தவிர்த்து மற்றைய வீதி வழியாக தமது பயணத்தை மேற்கொண்டனர்.

அதேவேளை, தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வைத் தடை செய்யக் கோரி யாழ்.நீதவான் நீதிமன்றில் கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட மனு மறுநாள் செவ்வாய்க்கிழமை நீதிமன்றால் தள்ளுபடி செய்யப்பட்டது.

அதையடுத்து புதன்கிழமை விசேட ஹெலியில் யாழ்ப்பாணம் வந்த சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த அரச சட்டவாதிகள் உள்ளிட்ட விசேட குழு நினைவேந்தலை தடை செய்ய கோரி மீண்டும் மனுத் தாக்கல் செய்தது. அதையும் மறுநாள் வியாழக்கிழமை யாழ். நீதவான் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இந்நிலையில், நேற்று நல்லூரில் உணர்வுபூர்வமான நிகழ்வில் இளைஞர்களின் உணர்வுகளைத் தூண்டி அவர்களை வன்முறையில் ஈடுபட வைக்க யாழ். பொலிஸார் முயன்றனர். எனினும், அவர்களின் முயற்சி பிசுபிசுத்தது.

## சர்வதேச விசாரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
விசாரணை அறிக்கைகளைச் சர்வதேசம் ஏற்றுக்கொண்டுள்ளது.”

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் வேண்டும் என்று எதிர்கட்சியினர் தெரிவித்து வருகின்றனர்.

குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது எமது அரசில் ஆகும். அதனால் இந்தத் தாக்குதல் தொடர்பான பின்னணியை அறிந்துகொள்ளும் தேவை எமக்கு இருக்கின்றது.

என்றாலும் இது தொடர்பாக ஏற்கனவே இரண்டு விசாரணைகள் இடம்பெற்றிக்கின்றன. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் விசாரணை அறிக்கையையும், ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையையும் சர்வதேசம் ஏற்றுக் கொண்டிருக்கின்றது.

இவ்வாறான நிலையில் எமது நாட்டில் திறமையான விசாரணையாளர்கள் இருக்கும்போது நாங்கள் ஏன் இதனை சர்வதேச விசாரணைக்கு வழங்க வேண்டும்.

எமது நாட்டில் முறையாக விசாரணை இடம்பெறவில்லை என்றால், எமது நாட்டு விசாரணை அறிக்கையை சர்வதேசம் மறுத்திருந்தால் அப்போது எங்களுக்கு இது தொடர்பாக சர்வதேச விசாரணைக்கு செல்வது குறித்து ஆராயலாம்.

அத்துடன், பேராயர் கர்னால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் நம்பத்தகுந்த உள்நாட்டு விசாரணை இடம்பெறுமாக இருந்தால் குண்டுத்தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியப்படாது எனத் தெரிவித்திருக்கின்றார்.

அதனால் ஏற்கனவே இரண்டு விசாரணைகள் இடம்பெற்று அறிக்கை சமர்ப்பிக்கப்படுள்ள நிலையில் தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 3 பேர் கொண்டு விசாரணைக்குழுவொன்றை நியமித்திருக்கின்றார். அதேபோன்று நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை அமைக்குமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கி இருக்கிறார்.

எனவே, இந்த விசாரணைக்குழுக்களின் அறிக்கைகளில் தெரிவிக்கப்படும் விடயங்கள் மற்றும் பரிந்துரைகளை செயற்படுத்துவதில் இருக்கும் தாமதமே உள்நாட்டு விசாரணையின் நம்பகத்தன்மை தொடர்பில் சந்தேகம் எழுவதற்கு காரணமாகும். அதனால் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் முறையாக விசாரணை மேற்கொண்டு சூத்திரதாரிகள் சட்டத்துக்கு முன் நிறுத்தப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.” – என்றார்.

## இலங்கையில் இனப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கனடாவின், பிரிட்டிஷ் கொலம்பியாவில், கடந்த ஜ"ன் மாதம் காலிஸ்தான் அமைப்பின் தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டதில் இந்தியத் தூதரக அதிகாரிகள் தொடர்புபட்டுள்ளனர் என்று கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றஞ்சாட்டியிருந்தார்.

இதையடுத்து, இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில், கனடாவின் குற்றச்சாட்டு தொடர்பில் இந்திய ஊடகமொன்றுக்குக் கருத்துரைத்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, கனடா எந்தவிதமான ஆதாரங்களும் இன்றி இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றது என்று தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

“பயங்கரவாதிகள் சிலர் கனடாவில் பாதுகாப்பான புகலிடத்தைக் கண்டுபிடித்துள்ளனர். இந்தநிலையில், கனேடியப் பிரதமர் இந்தியாவுக்கு எதிராக எந்தவித ஆதாரமும் இன்றி சில மூர்க்கத்தனமான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார். இலங்கைக்கும் கனடா இதே விடயத்தையே செய்தது. இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றது என்று கனடா கூறுவது முற்றிலும் உண்மைக்கு புறம்பான விடயமாகும். இலங்கையில் ஒருபோதும் இனப்படுகொலை இடம்பெறவில்லை என்பது அனைவரும் அறிந்ததே. இந்தநிலையில், கனேடியப் பிரதமர் ஆதாரம் எதுவுமின்றி இந்தியாவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார்.” – என்றார்.









# யாழ். பல்கலையில் நேற்று இறுதி நாள் நினைவேந்தல்

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் தியாக தீபம் திலீபன் அண்ணனின் உண்ணாவிரத அறப்போராட்டத்தின் இறுதி நாள் நினைவேந்தல் நேற்று செவ்வாய்கிழமை பல்கலைக்கழக பிரதான வளாகத்தில் மாணவர்களால் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப் பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் அழகராசா விஜயகுமார் தலைமையில் இடம்பெற்ற நினைவேந்தலில், கலைபீட நான்காம் வருட மாணவன் தீபன் நினைவு தின உரையை முன்வைத்திருந்தார். மலரஞ்சலி மற்றும் ஈகைச் சுடர் ஏற்றி நினைவேந்தல்கள் மாணவர்களால் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப் பட்டது.

மேலும் இதன் போது மரக்கன்றுகள் நினைவேந்தலில் கலந்து கொண்ட பொது மக்களுக்கு வழங்கப்பட்டது.

மேலும் கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் யோ.நெவில்குமார் மற்றும் விஞ்ஞானபீட மாணவர் ஒன்றிய தலைவர் ச.அபிறஷன், மாணவ ஒன்றிய உறுப்பினர்கள் உள்ளிட்டோரின் பங்கு பற்றுதல்களுடன் அனைத்து பல்கலைக் கழக மாணவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்விசாரா ஆளணியினர்,பொதுமக்கள், ஊடகவியலாளர் எனப் பலரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.











# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தியாகி திலீபன் நினைவேந்தல்

தியாக தீபம் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதில் பெருமளவிலான மாணவர்கள் கலந்துகொண்டு தியாக தீபம் திலீபனின் நினைவாகச் சுடரேற்றி – மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.











# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பேரினவாதப் பரவணிப் போக்கு

ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டு வெடிப்புத் தொடர்பான பாதிப்புக்கு நீதி, நியாயம் கேட்பதில் கூட தனது பௌத்த - சிங்களப் பேரினவாத முகத்தை தென்னிலங்கை அப்பட்டமாக - வெளிப்படையாக - முழு அளவில் காட்டியிருப்பது பெரும் வெட்கக்கேடானது.

இந்தத் தாக்குதல் தொடர்பில் அண்மைக்காலத்தில் நீதி, நியாயம் கேட்ட தரப்புகளில் மூவர் முக்கியமானவர்கள்.

ஒருவர் - இத்தாக்குதலில் பாதிக்கப்பட்ட கிறிஸ்தவர்களின் மறைத் தலைவர் கொழும்பு பேராயர்

அடுத்தவர் - இக்குண்டுத் தாக்குதல் நடந்த சமயம் நாட்டின் ஜனாதிபதியாக இருந்து, கடமை தவறியவர் என்று விமர்சிக்கப்பட்டு, அதற்காக உயர்நீதிமன்றத்தினால் நிதித் தண்டனைத் தீர்ப்பை எதிர்கொள்ளும் மைத்திரிபால சிறிசேன.

மூன்றாமவர் - எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ. குண்டுத் தாக்குதல் சமயமும், பின்னரும் அதிகாரத்தில் இருந்த தலைமைகளின் தவறும் இந்தத் தாக்குதல் கொடூரத்திற்கு பிரதான காரணம் என்பதை வெளிப்படுத்த வேண்டிய அரசியல் கடப்பாடு கருதி அந்த தாக்குதலை கண்டித்துச் செயற்பட வேண்டிய பொறுப்பில் இருப்பவர். செயற்படுபவர்.

இந்தத் தாக்குதலின் உண்மைகள் வெளிப்பட வேண்டும் என்ற விடயத்தை வலியுறுத்தும் கட்டாயத்தில் அவர்கள் மூவருமே உள்ளனர்.

நாட்டின் அதிகார வர்க்கமே இந்த தாக்குதலின் சூத்திரதாரிகள் என்ற குற்றச்சாட்டு 'சனல்-4' காணொலியில் வெளிப்பட்டு, அம்பலப்படுத்தப்பட்ட சூழலில், அதிகார வர்க்கமே அதற்கு (தனக்கு) எதிரான குற்றச்சாட்டுகளை விசாரிப்பது நீதி, நியாயமாக அமையாது என்ற உண்மையை உணர்ந்து, உடனடியாகவே இவ்விடயத்தில் சர்வதேச விசாரணையை மூவருமே வெளிப்படையாக - பகிரங்கமாக - கோரியிருந்தனர்.

அவர்கள் அப்படி கோரியதும் தமிழர்கள் மீது சிங்கள அரசின் படைகள் புரிந்த யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்ற குற்றச்சாட்டுகள் தொடர்பிலும் இதே அடிப்படை பண்புகள் பொருந்தும் என்பதால், அந்த விடயத்தில் பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பு கேட்கும் சர்வதேச நீதி விசாரணைப் பொறிமுறையும் அதன் அடிப்படையில் நீதி நியாயமானதே என்ற வாதம் பெரிய அளவில் எழுந்தது.

உடனடியாகவே பேரினவாத வெறிச் சிந்தனை தலைதூக்க, தமது சர்வதேச விசாரணை கோரிக்கையிலிருந்து இந்த மூவருமே பின்வாங்கத் தொடங்கிவிட்டனர்.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்புக்கு சர்வதேச விசாரணை கோரினால் அது யுத்தத்தின் இறுதிக்கட்ட விசாரணைகள் தொடர்பில் தமிழர்கள் கேட்கும் சர்வதேச விசாரணையையும் நியாயப்படுத்தி விடும், ஆகவே அந்தக் கோரிக்கையை நான் விலக்குகிறேன் என்று வெளிப்படையாகவே அறிவித்தார் மைத்திரியார்.

"ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியமில்லை. அரசியல் அழுத்தங்களுக்கு அடிபணிந்து, தவறு செய்பவர்களை காப்பாற்ற முயற்சிக்காது விசாரணை முன்னெடுக்கப்படுமானால் அது போதுமானது. சர்வதேசத்தை நாட வேண்டிய அவசியம் இல்லை" என்று தட்டை முறாக மாற்றிப் போட்டு, அந்தர் பல்டி அடித்திருக்கின்றார் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை.

இது விடயத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் நிலைப்பாடும் சுருதி குன்றி 'வீக்' ஆகிவிட்டது.

பேரினவாதத்தின் பரவணிப் பண்புகள் மாறாதவை என்பதற்கு இது நல்லதோர் உதாரணம்.

## மசாஜ் மையங்களுக்கு வருகிறது விதிமுறைகள்

நாடு முழுவதும் உள்ள அனைத்து மசாஜ் மையங்களையும் (ஸ்பா) ஒழுங்குபடுத்துவதற்கும் அவற்றை நடத்துவதற்கும் புதிய விதிகளை அறிமுகப்படுத்துவதற்கு தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன எனப் பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்தின் அறிவுறுத்தலின் படி, பொது நிர்வாக அமைச்சு ஒழுங்குபடுத்தும் செயல்முறையைத் தயாரிக்கத் தொடங்கியுள்ளது.

எவ்வாறாயினும், நாடு முழுவதிலும் உள்ள மசாஜ் மையங்களை ஒழுங்குபடுத்துதல், வருடாந்த வரி அறவீடு, அந்த நிலையங்களில் இருந்து பதிவுக் கட்டணம் அறவிடுதல் போன்ற விடயங்கள் தொடர்பில் பொது நிர்வாக அமைச்சு தமது சங்கத்துடன் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதாக இலங்கை ஸ்பா சங்கத்தின் தலைவர் பிரசன்ன முனசிங்க தெரிவித்துள்ளார்.

## போர்க்குற்றவாளிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விடுத்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் நடைபெற்றும் சந்தர்ப்பத்தில் அவர்கள் இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளனர்.

தமிழ் மக்களுக்கு எதிரான நடக்கும் மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பாக இலங்கை முறையாக பொறுப்புக்கூற வேண்டும் என்று குடியரசுக் கட்சியின் காங்கிரஸ் உறுப்பினர்களான சமர் லீ மற்றும் பில் ஜோன்சன் ஆகியோர் தலைமையிலான காங்கிரஸ் உறுப்பினர்கள் அமெரிக்காவிடம் கோரியுள்ளனர்.

இலங்கையில் இன்னும் குற்றவாளிகள் அனுபவிக்கும் தண்டனையின்மை அந்நாட்டில் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்கு வழிவகுத்துள்ளது.

மேலும், மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக கோட்பாடுகளைப் பாதுகாப்பதில் உறுதிபூண்டுள்ள நாடு என்ற வகையில், அமெரிக்கா இந்த நடவடிக்கைகளை எதிர்த்து அவற்றை நிறுத்துவதற்குப் பாடுபட வேண்டும் என்று காங்கிரஸ் உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்தக் கடிதத்தில் கையெழுத்திட்டுள்ள 12 காங்கிரஸ் உறுப்பினர்களும், இலங்கை அரச தரப்பினரும் அதன் இராணுவத்தினரும் கடுமையாகச் சர்வதேச சட்டங்களை மீறும் குற்றங்களில் ஈடுபட்டனர் என்று குற்றம் சுமத்தியுள்ளனர்.

விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை இராணுவத்துக்கும் இடையிலான நடந்த போரில் இலங்கை அரச தரப்பினரும் இராணுவத்தினரும் சர்வதேச சட்டங்களை மீறும் குற்றங்களைச் செய்துள்ளனர் என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

போர் சூன்ய பகுதிகள் என்று அழைக்கப்படும் பகுதிகளில் தமிழ் மக்கள் மற்றும் மருத்துவமனைகள் உட்பட பொதுமக்களின் சொத்துக்கள் மீது இலங்கை இராணுவம் வேண்டுமென்றே ஷெல் தாக்குதல் நடத்தியது.

2009 ஜனவரி முதல் மே மாதம் வரையான காலத்தில் இலங்கை இராணுவத்தின் நடவடிக்கைகள் சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும்.

யுத்தத்தின்போது தமிழ் மக்களுக்கு எதிராக இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட பாலியல் துஷ்பிரயோகங்கள் தொடர்பாகவும் காங்கிரஸ் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கையில் பொறுப்புக்கூறல் நடைமுறையில் இல்லாவிட்டாலும், கடுமையான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களுக்கு வெகுமதிகளை வழங்கும் கலாசாரம் இலங்கையில் இருக்கின்றது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமாக விசாரித்து விசாரணைக்கு உட்படுத்துவதற்குப் பதிலாக, இலங்கை அரசு பல போர்க் குற்றவாளிகளுக்கு உயர் அரசியல் அல்லது இராணுவத் தலைமைப் பதவிகளைப் பரிசாக வழங்கியுள்ளது.

நீதி மற்றும் பொறுப்புக்கூறலில் உறுதியான முன்னேற்றம் ஏற்படாதமைக்கு இலங்கையில் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசுகளே பொறுப்புக்கூற வேண்டும் என்றும் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# தொடர்கின்றது விடுதலை வேட்கை மெய்ப்பிக்கப்பட்டது திலீபன் கூற்று

## நினைவேந்தல் நிகழ்வில் ரவிகரன் தெரிவிப்பு



(முல்லைத்தீவு நிருபர்)

**“தமிழர்களின் விடுதலைக்காக ஆரம்பிக்கப்பட்ட ஆயுதப் போராட்டம் முப்பது வருடங்களின் பின் மௌனிக்கப்பட்ட போதும், தமிழர்களின் விடுதலைக்கான பயணம் நினைவேந்தல்களின் மூலமும், ஜனநாயக வழி ஆர்ப்பாட்டங்கள் மூலமும் தொடர்கின்றது. இதன்மூலம் “போராட்ட வடிவங்கள் மாறலாம், இலட்சியம் மாறாது” என்ற தியாகி திலீபனின் கூற்று மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.”**

**- இவ்வாறு முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.**

தியாக தீபம் திலீபனின் 36ஆம் நினைவேந்தல் நிகழ்வு முல்லைத்தீவு – சுதந்திரபுரம் சந்தி வளாகத்தில் நேற்று நடைபெற்றது. அங்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஒரு காலத்தில் அகிம்சை என்றால், அது மகாத்மா காந்தி என இந்தியா மார் தட்டிக்கொண்டிருந்தது. இந்நிலையில் அதே இந்தியாவின் அடக்குமுறைகளைப் பொறுத்துக்கொண்டு, இந்தியா ஏதாவது தீர்வுகளைப் பெற்றுத்தரும் என்ற எண்ணத்துடன், தியாக தீபம் திலீபன் எமக்காக, தலைவரின் சிந்தனைக் கேற்ப ஓர் அகிம்சைப் போராட்டத்தை முன்னெடுத்து தன்னுயிரைத் தியாகம் செய்தார்.

இவ்வாறான சூழலில் நாம் தியாக தீபத்தினுடைய 36ஆம் ஆண்டு நினைவேந்தலை மேற்கொண்டு வருகின்றோம்.

இந்த நினைவேந்தல்களினூடாக தியாக தீபம் திலீபன் யார் என்பதை, நாம் எமது அடுத்த தலைமுறைக்குக் சொல்லிக்கொடுப்பதும், தியாக தீபத்தை அடுத்த தலைமுறைக்குக் கடத்துவதுமே எமது நோக்கமாகும்.

எமது அடுத்த தலைமுறையினர் பலரும் தாமாக முன்வந்து தியாக தீபம் திலீபனை நினைவேந்துவதையும், அவருக்கான அஞ்சலிகளைச் செலுத்துவதையும் காணும்போது மிகுந்த மகிழ்ச்சியளிக்கின்றது.

தியாக தீபம் திலீபன் உண்ணாவிரதம் இருக்கும்போது, பேச முடியாத நிலையில் அவரால் சில வசனங்கள் எழுதப்பட்டன.

“நான் மரணத்தை மகிழ்ச்சியுடனும், பூரண திருப்தியுடனும்தான் தழுவிக் கொள்கின்றேன். என் தலைவனின் தலைமையில் அனைத்து மக்களும் கிளர்ந்தெழுவார்கள் என்பதை நான் உறுதியாக நம்புகின்றேன். இந்த மாபெரும் மக்கள் புரட்சி என்றோ ஓர் நாள் எம் இலட்சியத்தை நிறைவேற்றியே தீரும். எம் மக்கள் மீது கொண்ட அசையாத நம்பிக்கையின் பேரில், அவர்கள் மீது கொண்ட தாழாத பாசத்தின் பேரில், அவர்களின் விடிவுக்காக நான் 651ஆவது விடுதலைப்புலியாக என் தோழர்களை நோக்கி மெதுவாகப் போய்க்கொண்டிருக்கின்றேன்” என்று எழுதினார்.

இவ்வாறாக எமக்கான விடுதலைக் காகவும், சுதந்திரத்துக்காகவும் கோரிக்கைகளை முன்வைத்து, நீர், உணவு ஏதுமின்றி நாளாந்தம் தனது உடலினை உருக்கி எமக்காக உயிர்நீத்தார் தியாக தீபம் திலீபன்.

இவ்வாறு அகிம்சை வழிப் போராட்டத்தை முன்னெடுத்ததன் ஊடாக இங்கு தமிழர்களாகிய நாம் விடுதலைக்காகப் போராடி வருகின்றோம் என்பதை அறவழியில் உலகறியச் செய்தார்.

குறிப்பாக கடந்த காலத்தில் தமிழர்களுக்கான தீர்வு விடயத்தில் இலங்கை அரசு பண்டா – செல்வா ஒப்பந்தம், டட்லி–செல்வா ஒப்பந்தம் என ஒப்பந்தங்களை மேற்கொண்டு தமிழர்களை ஏமாற்றி வந்தது.

அதனைத் தொடர்ந்து இலங்கை – இந்திய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு அதிலும் தமிழர்களாகிய நாம் ஏமாற்றப்பட்ட நிலையிலேயே இருக்கின்றோம்.

“போராட்ட வடிவங்கள் மாறலாம். இலட்சியம் மாறாது” எனத் திலீபன் அன்று சொல்லியதற்கு இன்றும் தமிழ் மக்கள் வடிவம் கொடுத்து வருகின்றார்கள்.

தமிழர்களுக்கான விடுதலைப் பயணத்தில் முப்பது வருடகால யுத்தம் மௌனிக்கப்பட்டு, நாம் வீழ்ந்து விட்டதாக அனைவரும் நினைக்கும்போது, மீண்டும் இவ்வாறான நினைவேந்தல்கள் மூலமும், போராட்டங்கள் மூலமும் தமிழர்கள் தமது விடுதலைக்கான எழுச்சியைத் தொடர்ந்தும் காண்பித்து வருகின்றார்கள்.” – என்றார்.

# இந்தியா - கனடா விவகாரத்தில் இந்தியாவிற்கு இலங்கை ஆதரவு



இந்திய – கனடா விவகாரத்தில், இலங்கை இந்தியாவிற்கு ஆதரவளிக்கின்றது என இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகம் ஒன்று இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

சீக்கிய செயற்பாட்டாளர் கனடாவில் சுட்டுக்கொல்லப்பட்டதன் பின்னணியில் இந்திய அரசாங்கம் உள்ளது என கனடா முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு இந்தியா வழங்கியுள்ள பதில் உறுதியானதும் நேரடியானதுமாக உள்ளது என மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் என்ற அடிப்படையில், இந்த விடயங்களில் தமது நிலைப்பாடு தெளிவாக இருக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த விடயத்தில் இந்தியாவிற்கு ஆதரவளிகின்றோம் என்றும் உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட குறிப்பிட்டுள்ளார்.



# யாழ்.பல்கலைக்குப் பிரான்ஸ் தூதுவர் வருகை

இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான பிரான்ஸ் தூதுவர் ஜீன் ப்ராங்கோஸிஸ் பக்றெற் தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

பிரான்ஸ் தூதுவர் தலைமையிலான குழுவினர் நேற்றுக் காலை 10 மணியளவில் யாழ். பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்தனர்.

இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான பிரான்ஸ் தூதுவர் ஜீன் ப்ராங்கோஸிஸ் பக்றெற், கலாசார ஒத்துழைப்புக்கான துணைத் தூதுவர் ஒலிவியா பெலீமியர் மற்றும் பிரான்ஸ் தூதரகத்தின் ஊடகத் தொடர்பாடல் அதிகாரி டினுசா இல்லப்பெருமா ஆகியோர் அடங்கிய குழுவினரே நேற்று யாழ்ப்பாணம் வந்தனர்.

பல்கலைக்கழகத்துக்கு வருகை தந்த இந்தக் குழுவினரை



யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, பதிவாளர் வி. காண்டீபன், கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

சமகால விடயங்கள் மற்றும் பிரான்ஸ் தூதரகத்தினூடாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முன்னெடுக்கப்படும் கற்றல் மற்றும் ஆராய்ச்சி செயற்றிட்டங்களின் மீளாய்வு குறித்து இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டது.




# சீன ஆய்வுக் கப்பல் ஒக்டோபரில் இலங்கை வர அனுமதி இல்லை!

## வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு

சீனாவுக்கு சொந்தமான 'ஷி யான் – 6' ஆய்வுக் கப்பல் ஒக்டோபர் மாதத்தில் இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

சர்வதேச செய்தி ஊடகமொன்றுக்கு அமைச்சர் அலி சப்ரி வழங்கிய நேர்காணலை மேற்கோள்காட்டி இந்திய ஊடகங்கள் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளன.

பாதுகாப்பு தொடர்பான இந்தியாவின் கரிசனை இலங்கைக்கும் முக்கியமானது எனவும் வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியா உள்ளிட்ட நட்பு நாடுகளின் இணக்கப்பாட்டுடன் உருவாக்கப்பட்ட, நிலையான செயற்பாட்டு நடைமுறைகளுக்கு அமைவாக, கடல்சார் செயற்பாடுகள் தொடர்பில் இலங்கைக்கு எவ்வித சிக்கலும் காணப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஷி யான் 6 ஆய்வுக் கப்பல் இலங்கைக்கு வருவது தொடர்பில் இந்தியாவிற்கு காணப்படும் தொடர்ச்சியான கரிசனைகள் இலங்கைக்கு மிகவும் முக்கியமானவை என அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இலங்கையை மோதல்களற்ற பிராந்தியமாகப் பேணுவதற்கான தேவை காணப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் கவனத்தை வெகுவாக ஈர்த்துள்ள சீனாவின் ஷி யான் 6 ஆய்வுக் கப்பல் கடந்த 20 ஆம் திகதி இந்து சமுத்திரத்திற்குள் பிரவேசித்திருந்தது.

இந்த ஆய்வுக் கப்பல் 12 ஆயிரம் கடல் மைல்களுக்கும் அதிகமான கடற்பரப்பை உள்ளடக்கி பயணிக்கவுள்ளது. 13 ஆராய்ச்சிக் குழுக்கள் மற்றும் 28 அறிவியல் ஆய்வுத் திட்டங்களுடன் கடலில் 80 நாள்கள் செயற்படவுள்ளது



என சீன ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த கப்பல் இந்து சமுத்திரத்தில் பல்வேறு வகையான ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளது என ஆய்வு நடவடிக்கையின் பிரதான நிபுணர் சீன ஊடகங்களுக்கு குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, ஷி யான் 6 ஆய்வுக் கப்பல் ஒக்டோபர் 25 ஆம் திகதி இலங்கை கடற்பரப்பை வந்தடையும் என இலங்கை கடற்படை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மொனராகலை - புத்தலவில் சிறிய அளவில் நில அதிர்வு!

மொனராகலை மாவட்டத்தின் புத்தல பிரதேசத்தை அண்மித்த பகுதியில் சிறிய அளவிலான நில அதிர்வு நேற்றிரவு பதிவாகியுள்ளது.

2.4 மெக்னிட்யூட் அளவில் நில அதிர்வு பதிவாகியுள்ளது என புவிச்சரிதவியல், சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

படல்கும்பர , மொனராகலை, நக்கல, மதுருகெட்டி உள்ளிட்ட பகுதிகளில் நில அதிர்வு அவதானிக்கப்பட்டுள்ளது என புவிச்சரிதவியல், சுரங்கப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

இந்த வருடத்தில் கடந்த சில மாதங்களில் நாட்டின் சில பகுதிகளில் நில அதிர்வுகள் பதிவாகியிருந்தன.

கடந்த பெப்ரவரி 10 ஆம் திகதி வெல்லவாய, புத்தல பிரதேசத்தில் 3 , 3.5 மெக்னிட்யூட் அதிர்வு பதிவாகியிருந்தது.

பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி வெல்லவாயவில் 2.3 மெக்னிட்யூட் நில அதிர்வு பதிவாகியிருந்தது.

அடுத்த நாள் காலை 8.45 தொடக்கம் 9 மணி வரையான காலப்பகுதியில் உணவட்டுனவில் நில அதிர்வு பதிவாகியிருந்தது.

புத்தல, பெல்வத்த, ஆனபெல்லம, வெல்லவாயவை அண்மித்த பகுதியில் பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி 3 , 3.5 மெக்னிட்யூட் நில அதிர்வு பதிவானது.

மார்ச் மாதம் 18 ஆம் திகதி கிரிந்த பலுடுபான, ஹாஜியார் பகுதியில் 2.6 மெக்னிட்யூட் அதிர்வு பதிவாகியிருந்தது.

திருகோணமலை – கோமரன்கடவெலவில் 1.3 மெக்னிட்யூட் நில அதிர்வு கடந்த மார்ச் மாதம் 19 ஆம் திகதி பதிவானது.

கடந்தஜூலைமாதம்முதலாம்திகதிதென்னிந்திய பெருங்கடலில் ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் கொழும்பு உள்ளிட்ட பல இடங்களில் அதன் தாக்கம் உணரப்பட்டது.

# தொழிற்சங்கப் போராட்டத்துக்கு பெருத்த எடுப்பில் ஆரம்ப ஏற்பாடு



அரச மற்றும் அரச சார்பு தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து பெரும் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்க தீர்மானித்துள்ளன.

ஆறுவேண்டுகோள்களைமுன்வைத்தே இந்த போராட்டத்தை முன்னெடுக்க தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

கொழும்பில்இன்றுஒன்றுக்கூடியேஅரச மற்றும் அரச சார்பு தொழிற்சங்கங்களின் கூட்டிணைவு இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக அதன் அழைப்பாளர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

நாட்டைப் பொருளாதார ரீதியாக கட்டியெழுப்பும் ஆய்வுகளை முன்வைக்க அரசாங்கம் தவறிவிட்டது.

பொதுமக்கள் மற்றும் தொழிலாளர்களின் கழுத்தை இறுக்கினாலும் எந்த பலனும் கிடைப்பதாகத் தெரியவில்லை.

ஊழல், மோசடி மற்றும் வீண் விரயத்தை தடுக்கும் இலட்சியம் அரசாங்கத்துக்கு இல்லை.

நிர்வாகத்தின் தரம் அன்று இருந்ததைவிட இன்று மோசமாக உள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

நவீன முறைமைச் சிந்தனையில் முடிவெடுப்பதற்குப் பதிலாக நிலப்பிரபுத்துவ மற்றும் காலனித்துவ மனநிலையுடன் பழமைவாத முடிவெடுக்கும் நடைமுறைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த ஆறு கோரிக்கைகள் பின்வருமாறு:–

1. இருபதாயிரம் ரூபா சம்பள உயர்வு பெறுதல்.

2.தொழிற்சங்கங்களை ஒடுக்குவதை நிறுத்துங்கள்.

3.பயங்கரவாதத் தடைச் சட்டம், ஊடக ஒழுங்குமுறைச் சட்டம் உள்ளிட்ட அடக்குமுறைச் சட்டங்களை மீளப் பெறுதல்.

4.பொதுச் சேவையை துண்டிப்பதை நிறுத்துங்கள்.

5.அத்தியாவசிய சேவைக்கு உடனடியாக ஆள்சேர்ப்புச் செய்தல்.

6. மருந்துகள், வினைப்பொருள்கள், உபகரணங்கள் உள்ளிட்ட சுகாதார சேவைகள் தொடர்பான உள்கட்டமைப்புகளை வழங்க வேண்டும்

– போன்ற கோரிக்கைகளும் இதில் அடங்கும்.

# சி.ஐ.டியின் மலசலகூடத்திற்குள் வலி நிவாரணி மாத்திரைகள் மீட்பு

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் மலசலகூடத்திற்குள் இருந்து வலி நிவாரணி மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மூன்று சந்தர்ப்பங்களில் இவ்வாறான வலி நிவாரணி மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுவை சேர்ந்த சந்தேகநபர்களான குடு சலிந்து மற்றும் ஹரக் கட்டா ஆகியோர் தங்க வைக்கப்பட்டிருந்த அறைக்கு அருகிலுள்ள மலசலகூடத்திலிருந்து வலி நிவாரணி மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகள் மேலதிக பரிசோதனைகளுக்காக அரச இரசாயன பகுப்பாய்வாளருக்கு அனுப்பப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் இருந்து தப்பிச்சென்ற கான்ஸ்டபிள் தங்கியிருந்த காவலரணில் போதைப்பொருளுக்கு நிகரான வலி நிவாரணி மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


உங்கள் வாழ்க்கையை ஆரோக்கியமான, வெற்றிகரமான வாழ்க்கையாக வாழ

sky Yoga

மனவளக்கலை

**sky Yoga**

நான்கு நாள் சிறப்பு பயிற்சி நெறி

**செப். 28 முதல் ஒக்.01 ஆம் திகதி வரை | நேரம் : 09.00 - 12.00**

தொடர் விடுமுறை நாட்களை முன்னிட்டு இலங்கை மனவளக்கலை மன்றத்தின் ஏற்பாட்டில் தமிழ்நாட்டு பயிற்றுவிப்பாளர்களால் நடாத்தப்படும்

**sky Yoga ஆரம்ப நிலை பயிற்சிகள்**
**(Sky Yoga Foundation Course )**



- எளிமையான யோகாசனப் பயிற்சிகள் ( Simplified Yoga Asanas )
- தியான பயிற்சிகள் ( Meditation )
- காயகல்ப பயிற்சிகள்

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் மாத்திரம்

இடம் :
கொழும்பு அறிவுத்திருக்கோயில்
**sky Yoga Center**
53 - 1 / A, இராமகிருஷ்ண வீதி, வெள்ளவத்தை,
கொழும்பு 06.

தொடர்புகளுக்கு :
0779 371 846
0777 364 885
0774 951 607

# உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல்களுக்கும் ராஜபக்ஷக்களுக்கும் எந்த தொடர்புமில்லை!

## எஸ்.பி. திஸநாயக்க எம்.பி. திட்டவட்டம்



உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கும் ராஜபக்ஷவினருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை எனவும், 'சனல் 4' அலைவரிசை எந்த விசாரணையும் இல்லாமலே இந்தத் தாக்குதல் சம்பவத்தில் கோட்டாபய ராஜபக்ஷ மீது குற்றம் சுமத்த முயற்சிக்கின்றது என்றும் பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன கட்சிக் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

சனல் 4 செய்திச்சேவை வெளியிட்ட ஆவணப்படத் தொகுப்பில் எந்த விசாரணையும் இல்லாமல், ஆராய்ந்து பார்க்காமல், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான குற்றச்சாட்டை கோட்டாபய ராஜபக்ஷ மீது சுமத்த மோசமான முயற்சியை மேற்கொண்டுள்ளது.

இந்த தாக்குதலுக்கும் ராஜபக்ஷக்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இந்த தாக்குதல் தொடர்பாக பல விசாரணைகள் இடம்பெற்றிருக்கின்றன. சர்வதேச விசாரணைகளும் இடம்பெற்றிருக்கின்றன. அதன் பிரகாரம் இந்த தாக்குதல் தொடர்பில் பலர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். சிலருக்கு நீதிமன்றம் தண்டனை வழங்கி இருக்கிறது.

அத்துடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இஸ்லாமிய ராஜ்ஜியம் அமைக்கும் சிந்தனைகொண்ட குழுவினாலே திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கிறது.

இதில் சஹ்ரான் ஹசீமின் தேசிய தௌஹீத் ஜமாத் இணைந்துகொண்டிருந்தது. சஹ்ரானுக்கு வழிகாட்டியது தற்போது சிறையில் இருக்கும் நவ்பர் மௌலவி என்ற நபராகும். இந்நிலையிலேயே 2014 இல் ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அபூபக்கர் உலக முஸ்லிம் ராஜ்ஜியம் என்ற சிந்தனையை அறிமுகப்படுத்தினார்.

எமது நாட்டில் இந்த தாக்குதல் 2019 இல் இடம்பெறுவதற்கு முன்னர் 11 சம்பவங்கள் இடம்பெற்றன. நல்லாட்சி அரசாங்க காலத்திலேயே அவை இடம்பெற்றிருக்கின்றன.

இந்த சம்பவங்கள் இடம் பெற்றுக்கொண்டிருக்கையில் இந்தியப் புலனாய்வு அதிகாரி ஒருவர் சஹ்ரானுடன் தொடர்பு கொண்டு ஐ.எஸ். தொடர்பாக பல தகவல்களை பெற்றுக் கொண்டுள்ளார்.

இந்த தகவல்கள் மூலமே தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்னர் இந்தியா எமது பாதுகாப்பு பிரிவுக்கு தகவல் வழங்கி இருந்தது.

ஆனால் எமது பாதுகாப்பு சபையில் இருந்த குழப்ப நிலை காரணமாக இந்த இரகசிய தகவலை சரியான முறையில் ஆராயாமல் இருந்ததன் பலனாகவே இந்த தாக்குதலைத் தடுக்க முடியாமல் போயிருக்கிறது.

அதனால், உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கும் கோட்டாய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பொதுஜன பெரமுன கட்சிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இந்தியப் புலனாய்வு பிரிவு தகவல் வழக்கியும் எமக்கு அதனை தடுக்க முடியாமல் போயிருக்கிறது. – என்று தெரிவித்துள்ளார்.

# அலி சப்ரி – ஜெய்சங்கர் நியூயோர்க்கில் சந்திப்பு



இலங்கை – இந்தியாவுக்கு இடையிலான பலம்வாய்ந்த இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்திக்கொள்வதற்கான நடவடிக்கைகள் குறித்து இருநாடுகளினதும் வெளிவிவகார அமைச்சர்கள் கூட்டாக ஆராய்ந்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 78 ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக நியூயோர்க் சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான உயர்மட்டப்பிரதிநிதிகள் குழு, கடந்த வாரம் முழுவதும் அங்கு பல்வேறு உயர்மட்ட சந்திப்புக்களில் கலந்துகொண்டது.

இந்நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் நாடு திரும்பியுள்ள பின்னணியில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான உயர்மட்டக்குழுவினர் இன்னமும் அமெரிக்காவில் தங்கியிருந்து உயர்மட்ட சந்திப்புக்களில் ஈடுபட்டுவருகின்றனர்.

அதன் ஓரங்கமாக அமைச்சர் அலி சப்ரிக்கும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது இலங்கை – இந்தியாவுக்கு இடையிலான பலம்வாய்ந்த இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்திக்கொள்வது குறித்துக் கலந்துரையாடப்பட்டதாக அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நேற்று முன்தினம் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் பணிப்பாளர் அச்சிம் ஸ்டெய்னரை சந்தித்த அமைச்சர் சப்ரி, டிஜிட்டல் மயமாக்கம், காலநிலை மாற்ற சவால்களுக்கு ஈடுகொடுக்கும் தன்மை, சக்தி வலு விரிவாக்கம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு மற்றும் பல்தரப்பு ஒத்துழைப்புக்களை வலுப்படுத்திக்கொள்வது குறித்துக் கலந்துரையாடியுள்ளார்.

அதுமாத்திரமன்றி ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்திட்டத்தினால் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுவரும் சிறந்த திட்டங்கள் தொடர்பில் அவர் தனது பாராட்டையும் வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும், பொருளாதார மற்றும் சமூக விவகாரங்களுக்கான ஐக்கிய நாடுகள் திணைக்களத்தின் பிரதி செயலாளர் நாயகம் லி ஜுன்ஹுவாவுக்கும் அமைச்சர் அலி சப்ரிக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் ஐக்கிய நாடுகள் தலைமையகத்தில் நடைபெற்றது.

இதன்போது பொருளாதார ரீதியில் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் தொடர்பில் லி ஜுன்ஹுவா பாராட்டுத் தெரிவித்துள்ளார். அத்தோடு 2030 ஆம் ஆண்டுக்கான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கான ஒத்துழைப்புக்களை விரிவுபடுத்திக்கொள்வது குறித்தும் இச்சந்திப்பின்போது

# எறிபந்தில் தேசிய சம்பியானனது ஏறாவூர் மாக்கான் மாக்கார்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான எறிபந்து ( Throw ball) போட்டியில் ஏறாவூர் மாக்கான் மாக்கார் தேசிய கல்லூரி சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.



# ஒலுவில் அல்-ஹம்றா மாணவர் இருவருக்கு தங்கம்

(எஸ்.அஷ்ரப்கான்)

மாகாணமட்டமெய்வல்லுநர்விளையாட்டுப் போட்டியில் ஒலுவில் அல்-ஹம்றா மாணவர்கள் இருவர் தங்கப் பதக்கம் வென்று சாதித்துள்ளனர்.

பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் கந்தளாயில் நடைபெற்றன.

இதில் அல்-ஹம்றா மகா வித்தியாலய மாணவர்களான எம்.ஏ.ஆர். ஹாபீஸ் ரய்ஹான் 12 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியிலும், ஹிதாயத்துல்லாஹ் லுபினா ஈட்டி எறிதல் போட்டியிலும் முதலிடங்களைப் பெற்று சாதித்துள்ளனர்.

இதேவேளை,16 வயதுப் பிரிவில் ஆர்.எப்.சமா பரிதிவட்டம் வீசும் போட்டியில் நான்காம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் இம்மாணவர்களுக்கான பாராட்டு விழா ஒன்று பாடசாலை சார்பாக நடத்தப்பட்டது.

இதில், பாடசாலை அதிபர் அஷ்ஷேய்க் யு.கே. அப்துர் ரஹீம், பிரதி அதிபர் எம்.ஏ. கமறுன்நிஸா, உதவி அதிபர்களான எம்.எச்.எம்.நஸீம், ஏ.ஜே.எம்.றினீஸ், மாணவர்களைப் பயிற்றுவித்த பொறுப்பாசிரியர்களான ஏ.எம்.எம்.கியாஸ், ஆர்.நௌசாத் மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஏ.அஸ்மத் சஹி உட்பட பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# திருகோணமலை மாணவி முதலிடம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட பழுதூக்கும் போட்டியில் திருகோணமலை மாணவி தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

பாடசாலைகளுக்கிடையில் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகள் நடந்து வருகின்றன.

இந்நிலையில்,அண்மையில்பொலன்னறுவை றோயல் கல்லூரியில் இடம் பெற்ற பழுதூக்கல் போட்டியில் திருகோணமலை சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலய மாணவி சுரேஸ்குமார் கதுர்ஸிகா முதலிடத்தைப் பெற்று தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.





# பாரிஸிலும் எழுச்சியுடன் திலீபனின் நினைவேந்தல்

பிராஸின் தலைநகர் பாரிஸ் 10 ஆம் வட்டாரத்தில் தமிழர்களின் வர்த்தக மையமான "குட்டி யாழ்ப்பாணம்" எனஅழைக்கப்படு லா சப்பல் La Chapelle பகுதில் செப்படம்பர் 15 ஆம் திகதி முதல் செப்படம்பர் 26 ஆம் திகதி வரை பாரிஸ் 10 ஆம் வட்டார காவல் துறை மற்றும் நகரசபையின் அனுமதி யுடன் பொதுமக்கள் வணக்கம்கம் செலுத்துவதற்காக தியாக தீபம் திலீபன் அவர்களின் திருவுருவப்படம் வைக்கப்பட்டிருந்தது. அதே நேரத்தில் திலீபன் அவர்களின் 12 நாள்கள் உண்ணாவிரதம் குறித்த விளக்கமளிக்கப்படும் பதாகையும் பிரெஞ்சு மொழியில்காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. இது பிரஞ்சு மக்களினதும், பாரிஸின் சுற்றாலாவாசிகளினதும் கவனத்தையும் ஈர்தத. குறிப்பிடத்தகத்து.

இந்த நிகழ்வு பிரான்ஸைத் தளமாகக் கொண்டு இயங்கும் சே நூ தமிழ் Ç'est Nous les Tamouls அமைப்பால் முன்னெடுக்கப்பட்டது . திலீபன் தியாக தீபமாகிய நாளான நேற்று செப்படம்பர் 26 செவ்வாய்கிழமை காலை 10.48 மணிக்கு நினைவேந்தல் நடைபெற்றது.

பிராஸில் வாழும் தமிழ் மக்களும் , பாரிஸின் லா சப்பல் பகுதியின் தமிழ் வர்தகர்களும் இந்த நினைவேந்தலில் கலந்துகொண்டு தீலிபனுக்கு நினைவஞ்சலி செலுத்தினார்கள்.



# தியாக தீபம் திலீபனின் திருவுருவத்தை கையில் பச்சை குத்தியுள்ள இளைஞர்!



- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம் – நல்லூரில் நேற்று நடைபெற்ற தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டிருந்த இளைஞர் ஒருவர் தனது கையில் தியாக தீபத்தின் திருவுருவப் படத்தைக் கையில் பச்சை குத்தி இருந்தது பலரின் கவனத்தை ஈர்த்தது.

இது தொடர்பான புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி யுள்ளன.

# கிளிநொச்சியில் இளைஞர் கொலை

கிளிநொச்சியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி – கோணாவில், ஊற்றுப்புல பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார், சடலத்தை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்தனர்.

கிளிநொச்சி – கோணாவில் கிராமத்தைச் சேர்ந்த 30 வயதுடைய புஷ்பராசா தினேஸ்கரன் என்பவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி குற்றத் தடுப்புப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கை கடற்படை கல் வீச்சு!





இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் கற்களை வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து நேற்று முன்தினம் மாலை மீன் பிடிப்பதற்கு அனுமதி சீட்டு பெற்று சுமார் 50 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் கடற்றொழிலாளர்கள் மீன்பிடிக்க சென்றுள்ளனர்.

இந்த நிலையில் கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அந்தப் பகுதிக்கு ரோந்து வந்த இலங்கை கடற்படை எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி ராமேஸ்வரத்தை சேர்ந்த ஒரு விசைப்படகு மீது கற்களால் தாக்கியதில் அதில் இருந்த பிராங்கிளின் என்ற கடற்றொழிலாளர் படுகாயம் அடைந்துள்ளார்.

இதையடுத்து, ஏனைய மீனவர்கள் அவரை ராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். அவர் சிகிச்சை பெற்ற பின்னர் வீட்டிற்கு சென்றுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் மத்திய, மாநில உளவு பொலிஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர்.

# அ.தி.மு.கவுக்கு எதிராக கருத்து தெரிவிக்கக்கூடாது: பா.ஜ.க.நிர்வாகிகளுக்கு கட்சி மேலிடம் திடீர் தடை

தமிழகத்தில் பா.ஜ.கவுடனான கூட்டணியை முறித்துக் கொண்ட நிலையில், அ.தி.முகவினருக்கு எதிராக கருத்து தெரிவிக்கக் கூடாது என பா.ஜ.க நிர்வாகிகளை கட்சி மேலிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

தமிழகத்தில் அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணி முதன்முறையாக 1998 மக்களவைத் தேர்தலில் உருவானது. அந்தக் கூட்டணி ஓராண்டு மட்டுமே நீடித்தது. மீண்டும் 2004 மக்களவைத் தேர்தலில் பா.ஜ.கவுடன் அ.தி.மு.க. கூட்டணி அமைத்தது. அந்தத் தேர்தலில் தோல்வியே கிடைத்தது.

இதனால், இனிமேல் பா.ஜ.கவுடன் ஒருபோதும் கூட்டணி கிடையாது என அப்போதைய பொதுச் செயலாளர் ஜெயலலிதா அறிவித்தார். அதன்பின்னர் ஜெயலலிதா மறையும் வரை எந்தத் தேர்தலிலும் பா.ஜ.கவுடன் அ.தி.முக கூட்டணி அமைக்கவில்லை. தமிழகத்தில் 2014 ஆம் ஆண்டு நடந்த மக்களவைத் தேர்தலில் பிரச்சாரங்களில் பிரதமர் மோடியை ஜெயலலிதா கடுமையாக விமர்சனம் செய்தார். அந்தத் தேர்தலில் அ.தி.மு.க. பெரியளவில் வெற்றி பெற்றது.

ஜெயலலிதா மறைவுக்கு பின்னர் 2019 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் மீண்டும் அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணி உருவானது. 2021 ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலிலும் கூட்டணி தொடர்ந்தது. இந்த இரண்டு தேர்தல்களிலும் தமிழகத்தில் அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணி தோல்வியைச் சந்தித்தது.



தமிழத்தில் 2021 ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலுக்குப் பின்னர் பா.ஜ.க. மாநிலத் தலைவராக அண்ணாமலை நியமிக்கப்பட்டார். அப்போது அ.தி.மு.கவில் ஓ.பன்னீர்செல்வம் ஓரங்கப்பட்டு எடப்பாடி பழனிச்சாமி ஒரே தலைமையாக உருவெடுத்தார். அதன் பின்னர் அ.தி.மு.க., பா.ஜ.க. இடையே அவ்வப்போது விரிசல் ஏற்பட்டு வந்தது.

பல முறை இரு கட்சித் தலைவர்களும் வார்த்தைப் போரில் ஈடுபட்டனர். உச்சக் கட்டமாக ஜெயலலிதா குறித்தும், அண்ணா குறித்தும் அண்ணாமலை முன்வைத்த கருத்துகள் அதிமுகவில் கொந்தளிப்பை உருவாக்கியது.

இதனால், பா.ஜ.க. தலைவர் பதவியில் இருந்து அண்ணாமலையை மாற்றும் முயற்சியில் அ.தி.மு.க. தலைவர்கள் ஈடுபட்டனர். அதற்கு பா.ஜ.க. மேலிடம் ஒப்புக்கொள்ளவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சூழலில் பா.ஜ.கவுடனான கூட்டணியை அ.தி.மு.க. முறித்துக் கொண்டுள்ளது. தமிழகத்தில் மட்டுமல்ல, தேசிய அளவிலும் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து வெளியேறுகிறோம் என்றும் மக்களவைத் தேர்தலில் மட்டுமல்ல, அடுத்து நடைபெறும் சட்டப் பேரவைத் தேர்தலிலும் பா.ஜ.கவுடன் கூட்டணி கிடையாது எனவும் அ.தி.மு.க. அறிவித்துள்ளது.

கூட்டணி முறிவு குறித்து தமிழக பா.ஜ.க. தலைவர்கள் வெளிப்படையாக கருத்து தெரிவிக்காமல் உள்ளனர். அண்ணாமலையிடம் கேட்டதற்கு, கட்சி மேலிடம்தான் பதில் சொல்லும் எனக் கூறிவிட்டார்.

அதேநேரத்தில் அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணி முறிவை தமிழகம் முழுவதும் அ.தி.மு.கவினர் கொண்டாடி வருகி.ன்றனர். சில இடங்களில் பா.ஜ.க வினரும் பட்டாசு வெடித்துள்ளனர். சமூக வலைதளங்களில் அ.தி.மு.கவினரும், பா.ஜ.கவினரும் கடுமையான வார்த்தைப் போரில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், கூட்டணி விவகாரத்தில் அ.தி.மு.கவினருக்கு எதிராக எந்தக் கருத்துக்களையும் தெரிவிக்கக் கூடாது என பா.ஜ.கவினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக பா.ஜ.கவின் அமைப்பு பொதுச் செயலாளர் கேசவவிநாயகம், கட்சியின் முக்கிய நிர்வாகிகளுடன் பேசியுள்ளார்.

# அசர்பைஜானில் எரிவாயு நிலையத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் 20 பேர் பலி!





அசர்பைஜானில்எரிவாயுநிலையத்தில் ஏற்பட்ட பாரிய வெடி விபத்தில் சிக்கி 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

அசர்பைஜானில் உள்ள ஸ்டெபன கெர்ட் பகுதியில் எரிவாயு நிலையம் இயங்கி வருகிறது. இங்கு நேற்று முன்தினம் பிற்பகுதியில் திடீரென வெடி விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் சிக்கி 20 பேர் உயிரிழந்தனர்.

சம்பவ இடத்தில் இருந்து 13 உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அத்துடன், ஏழு பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

மேலும், 290 இற்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் பலர் கவலைக் கிடமாக இருகின்றனர் என அந்த நாட்டு பிராந்தியத்தின் சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

மூன்று தசாப்த கால பிரிவினை வாத ஆட்சிக்குப் பின்னர் அசர்பைஜானின் பிராந்தியத்தை முழுமையாக மீட்பதற்காக கடந்த வாரம் இராணுவம் நடவடிக்கை மேற்கொண்டது.

இதன் பின்னர், நாகோர்னோ-கராபாக்கின் ஆயிரக்கணக்கான குடியிருப் பாளர்கள் இப்பகுதியை விட்டு வெளியேறும் போது இந்த வெடிப்பு ஏற்பட்டுள்ளது என வெளிநாட்டு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

# லிபியாவில் அணை உடைந்ததில் ஆயிரக்கணக்கானவர்கள் பலி!

## அதிகாரிகள் 8 பேர் கைது



லிபியாவில் புயல் காரணமாக இரண்டு அணைகள் உடைந்து வெள்ளப்பெருக்கில் சிக்குண்டு ஆயிரக் கணக்கானவர்கள் உயிரிழந்த விடயம் தொடர்பில் 8 அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த அதிகாரிகளின் தவறான மேலாண்மை, அலட்சியம் ஆகியவையே இந்த அனர்த்திற்கு காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதான 08 அதிகாரிகளிடமும் தற்போது விசாரணைகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன என அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அவர்களுக்கு, 62 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

லிபியாவில் புயல் காரணமாக இரண்டு அணைகள் உடைந்து வெள்ள நீரில் சிக்கி 4 ஆயிரத்திலிருந்து 11 ஆயிரத் திற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடதக்கது.

# தென்கொரிய ஜனாதிபதி பிரித்தானியா செல்கிறார்!



மூன்றாம் சார்ளஸ் மன்னரின் அழைப்பை ஏற்று, தென்கொரிய ஜனாதிபதி எதிர்வரும் நவம்பர் மாதம் பிரித்தானியாவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

62 வயதுடைய, தென்கொரிய ஜனாதிபதியான யூன் சுக் அண் மையில், அமெரிக்காவுக்கான விஜயம் செய்திருந்தார்.

இதன்போது, வடகொரியாவின் அணுவாயுத அச்சுறுத்தலை எதிர் கொள்வதற்கான பேச்சுக்கள் முன்னெ டுக்கப்பட்டிருந்ததுடன், ஒப்பந்தம் ஒன்றிலும் கைச்சாத்திட்டிருந்தார்.

இந்தநிலையில், பிரித்தானிய மன்னருடன், சில முக்கிய பேச்சுக் களை நடத்துவார் என எதிர்ப் பார்க்கப்படுகின்றது.

# பஸ்ஸில் 20 பவுண் நகைகளைத் திருடிய இரு பெண்கள் உட்பட நால்வர் சிக்கினர்!

## வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் அதிரடி









**- கே.வசந்தரூபன் -**

மன்னாரில் இருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த பஸ்ஸில் 20 பவுண் நகைகளைத் திருடினர் என்ற குற்றச்சாட்டில் இரு பெண்கள் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னாரில் இருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த பஸ்ஸில் முருங்கன் பகுதியில் இருந்து ஆசிரியரான பெண் ஒருவரும் பயணித்தார்.

அந்த பஸ் வவுனியா, மாவட்ட செயலகம் முன்பாகப் பயணித்தபோது குறித்த பெண் பஸ்ஸில் இருந்து இறங்கினார். இதன்போது அந்தப் பெண்ணின் கைப்பை திறக்கப்பட்டு அதற்குள் இருந்த அவரது சங்கிலி, மோதிரம் உட்பட 20 பவுண் நகைகள் காணாமல்போனமையை அவதானித்தார். உடனடியாக பஸ்ஸை நிறுத்தி பஸ்ஸுக்குள் தேடியபோதும் நகை கிடைக்கவில்லை.

இதையடுத்து வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸில் அந்த ஆசிரியர் முறைப்பாடு செய்தார். முறைப்பாட்டையடுத்து வவுனியா தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜயதிலகவின் வழிகாட்டலில் குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ரத்நாயக்கா தலைமையில் பொலிஸ் சார்ஜன்டுகளான திஸாநாயக்கா, திலீப், பொலிஸ் கான்டபிள்களான உபாலி, தயாளன், இரேசா உள்ளிட்ட குழுவினர் துரித விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது சம்பவம் தொடர்பில் மகாறம்பைக்குளத்தில் வாடகைக்கு வீடு எடுத்து தங்கியிருந்த புத்தளம், 4ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த இரு பெண்களும், இரு ஆண்களும் என 4 பேர் கைது செய்யப்பட்டதுடன், திருடப்பட்டன எனக் கூறப்பட்ட 20 பவுண் நகை, ஓட்டோ மற்றும் பட்டா ரக வாகனம் என்பனாவும் பொலிஸாரால் கைப்பறப்பட்டன.

மேலதிக விசாரணையின் பின் நான்கு பேரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

# நவம்பர் 13 இல் நாடாளுமன்றத்தில் 2024 வரவு - செலவுத் திட்ட உரை!

2024 ஆம் நிதி ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் 13 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு உரை நிகழ்த்தப்படவுள்ளது.

அத்துடன், இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிடிய தெரிவித்துள்ளார்.

2 ஆம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அத்துடன், 2024 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் தொடர்பான மூன்றாம் வாசிப்பு மீதான விவாதம் நவம்பர் 22 முதல் டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியா தாமதிக்காது நீதி வழங்க வேண்டும்!

## சபா. குகதாஸ் வலியுறுத்து



"தியாக தீபம் திலீபனுக்கான நீதியைப் பாரத தேசம் இனியும் அலட்சியம் செய்யாது தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து வழங்க முன்வர வேண்டும்."

– இவ்வாறு வலியுறுத்தினார் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சபா. குகதாஸ்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தியாக தீபம் திலீபனின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல் அரசின் சட்ட மற்றும் இராணுவ - பொலிஸ் இயந்திரத்தின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் உணர்வு பூர்வமாக தமிழர் தாயகம் எங்கும் மக்களால் அனுஷ்டிக்கப்பட்டது.

ஜனாதிபதி வெளிநாடுகளில் சகல நினைவேந்தல்களையும் செய்வதற்கு அனுமதி வழங்கியுள்ளதாகக் கூறிவரும் சமநேரம் உள்நாட்டில் அரச இயந்திரத்தைப் பயன்படுத்தி தடைகளை ஏற்படுத்துவதும் புலனாய்வாளரைக் கொண்டு புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்தல் மற்றும் நேரடி அச்சுறுத்தல் என்பன தொடர்ந்த வண்ணமும் உள்ளன. ஆகவே, அரசு நினைவேந்தல் விவகாரத்தில் இரட்டை வேடம் போடுகின்றது.

உண்மையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அச்சுறுத்தல் இல்லாவிட்டால் மாபெரும் மக்கள் எழுச்சியைக் காணமுடியும். இது அரசுக்குத் தெரியும் சர்வதேசத்துக்கும் புரியும்.

தியாகி திலீபன் ஐந்து அம்சக் கோரிக்கைகளைப் பாரத தேசத்தை நோக்கி முன்வைத்து உண்ணா நோன்பை ஆரம்பித்தமை அனைவரும் அறிந்த வரலாறு. ஆனால், இன்று வரை அந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. அவசரகாலச் சட்டம் தற்காலிக நீக்கமே தவிர பயங்கரவாதத் தடைச் சட்டத்துடன் இணைந்துள்ளது. இது தொடர்பில் கடந்த காலத்தில் கசப்பான நிலையில் பாரத தேசம் இருந்தாலும் இன்று மக்களின் உணர்வுக்கு நீதி வழங்க வேண்டும்.

2009இல் ஆயுதப் போராட்டம் முள்ளிவாய்க்கால் மண்ணில் மௌனிக்கப்பட்ட பின்னர் ஈழத் தமிழர்கள் தொடர்ந்தும் விடுதலைப் போராட்ட நினைவேந்தல்களை நினைவுகொள்ளத் தவறவில்லை. பல அரச எதிர்ப்புக்கள் மத்தியில் நினைவேந்தல்களை அனுஷ்டிக்கின்றனர். இதன் மூலம் ஒரு செய்தியை மக்கள் வெளிப்படுத்துகின்றனர். தமக்கான விடுதலை வேண்டும், அது இதுவரை தங்களுக்கு கிடைக்கவில்லை என்பதே ஆகும்.

அத்துடன் ஈழத்தில் நடந்த விடுதலைப் போராட்டம் வெறுமனே ஒரு அமைப்பு சார்ந்த விடயம் இல்லை. அது ஒட்டுமொத்த மக்களின் விடுதலை வேட்கை என்பதை வெளிப்படுத்துகின்றது.

தியாக தீபம் திலீபனுக்கான நீதியைப் பாரத தேசம் இனியும் அலட்சியம் செய்யாது தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து வழங்க முன்வர வேண்டும். தொடர்ந்தும் பாதிக்கப்பட்ட மக்களைப் பலவீனப்படுத்தும் சிங்கள ஆட்சியாளர்களின் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்." – என்றார்.

# மத்திய வங்கி அரசமைப்பை மீறினால் நீதிமன்றத்தைத்தான் நாட வேண்டும்

## ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவிப்பு



இலங்கை மத்திய வங்கியோ அல்லது நிதியமைச்சோ அரசமைப்பை மீறியிருந்தால், நீதிமன்றத்தை நாடுவதே மிகவும் பொருத்தமான நடவடிக்கை என மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

இதுபோன்ற விவகாரத்தை நீதிமன்றத்திற்கு கொண்டு செல்வதற்குப் பதிலாக, அதிகாரிகளின் குடியிருப்புகளுக்கு சேதம் விளைவிக்கும் வகையில் தொடர்ந்து அறிக்கைகளை வெளியிடும் அரசியல்வாதிகள் குறித்து மக்களே தீர்மானிக்க வேண்டும்.

சமூகத்தின் சமீபத்திய கருத்து என்னவென்றால், நிதியமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆகியவை அரசமைப்பை மீறியுள்ளன.

நிதியமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆகியவை அரசமைப்பை மீறினால், எந்தவொரு அதிகாரிக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க உரிமை உண்டு. அத்தகைய நடவடிக்கைகளுக்கு என்னுடைய ஆதரவும் பங்களிப்பு செய்யும் என தெரிவித்துள்ளார்.



# சிவில் சமூக உறுப்பினர்களுடன் அமெரிக்கத் தூதுவர் சந்திப்பு

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், உள்ளூர் சிவில் சமூக உறுப்பினர்களைச் சந்தித்து ஊழல் எதிர்ப்பு விவகாரங்கள் குறித்து விவாதித்துள்ளார்.

இந்த நிலையில் இலங்கையில் நிர்வாகமும் பொருளாதார சீர்திருத்தங்களும் கைகோர்த்து செல்ல வேண்டும் என்று தூதுவர் தூதுவர் தனது சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

மேலும், டிரான்ஸ்பரன்சி இன்டர்நேசனல், இலங்கை மற்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் ஆகியவற்றின் பிரதிநிதிகளையும் சத்தித்து ஜூலி சங் பேச்சு நடத்தியுள்ளார்.

சீர்திருத்தங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய மற்றும் கையாளப்பட வேண்டிய முக்கிய ஊழல் எதிர்ப்பு பிரச்சினைகள் குறித்து இதன்போது விவாதிக்கப்பட்டது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 27.09.2023

## மேஷம்

உங்கள் நலனை மேம்படுத்தும் பயனுள்ள முடிவுகளை நீங்கள் எடுக்கலாம். திருப்தியான நிலை காணப்படும்.

பணியிடத்தில் இன்று சாதகமான பலன்கள் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பைப் பெறுவீர்கள்.

குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். நெருங்கிய சொந்தங்களுடன் வெளியிடங்களுக்கு செல்லும் வாய்ப்பு உள்ளது.

கையிலிருக்கும் பணம் திருப்திகரமாக இருக்கும். சேமிப்பதற்கான வாய்ப்புகளும் அதிகம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.இன்று நீங்கள் திடமாகவும் ஸ்திரமான ஆரோக்கியத்தையும் உணர்வீர்கள்.

## ரிஷபம்

உங்களுக்கு சாதகமாக பலன்கள் அமைய இன்று நீங்கள் மிகுந்த முயற்சி எடுக்க வேண்டும்.

பணியைப் பொறுத்தவரை உங்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும் சிறந்த வாய்ப்புகள் காணப்படுகின்றது. உங்கள் பணிகளை நீங்கள் தைரியத்துடனும் உறுதியுடனும் மேற்கொள்வீர்கள்.

உறவில் நல்ல பிணைப்பு காணப்படும். நடக்கும் நிகழ்சிகள் உங்களு மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருக்கும்.

நிதி வளர்ச்சி மகிழ்ச்சிகரமாக இருக்கும்.பண விஷயத்தில் நீங்கள் பயனுள்ள முடிவுகளை எடுக்கலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்கள் மனதிலும் எண்ணங்களிலும் நம்பிக்கை காணப்படும்.

## மிதுனம்

இன்று வழிபாடு மற்றும் பிரார்த்தனைக் கென்று சிறிது நேரம் ஒதுக்க உகந்த நாள். இதன் மூலம் ஆறுதலும் மகிழ்ச்சியும் கிடைக்கும். தொண்டு செயல்களில் ஈடுபடுவதன் மூலம் திருப்தி கிடைக்கும்.

பணியைப் பொறுத்த பயணங்கள் காணப்படுகின்றது. உங்கள் முயற்சிக்கு சிறந்த பலனைப் பெறுவீர்கள்.

குழந்தைகள் வளர்ச்சி பற்றிய பிரச்சினை கவலை அளிப்பதாக இருக்கும். அதில் மும்மரமாக இருப்பீர்கள்.

நிதி வளர்ச்சி மிதமாக இருக்கும். சில செலவுகள் ஏற்படும். வரவும் கண்டு மகிழ்வீர்கள்.

இன்று எந்த விதமான பெரிய பிரச்சினையும் இருக்காது என்பதால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## கடகம்

திரைப்படம் பார்த்தல் மற்றும் இசை கேட்டல் ஆகியவற்றுக்கு உகந்த நாள். இதனால் அமைதியும் ஆற்றலும் கிடைக்கும்.

பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் கவனமாகப் பணியாற்ற வேண்டும்.மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் நெருங்கியவர்களுடன் பழகும் போது கவனம் தேவை. வீட்டில் சூடான வாக்குவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது. அது தொடராமல் இருக்க முயற்சி செய்யுங்கள்.

இன்று நிதி வளர்ச்சிக்கு உகந்த நாள் அல்ல. பணத்தை கையாள முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்ய வேண்டியிருக்கும். இது உங்களுக்கு வருத்தம் அளிக்கும்.

## சிம்மம்

இன்றைய நாள் சிறிது மாறுதல்களைக் கொண்டு சேர்க்கும். நீங்கள் சூழ்நிலையை சமாளித்து உங்களுக்கு சாதமாக ஆக்கும் தைரியத்துடன் காணப்படுவீர்கள். பயணங்கள் ஏற்படலாம்.

பணியிடத்தில் நேர்மை மற்றும் அர்ப்பணிப்பு காரணமாக நன்மை பெறுவீர்கள். பணி நிமித்தமான பயணத்திற்கான சாத்தியம் உள்ளது.

உங்கள் குடும்ப நண்பர்களுடன் நல்லிணக்கம் காணப்படும். நெருங்கியவர்களுடன் வாக்குவாதம் ஏற்படாமல் இருக்க கவனமாக இருங்கள்.

நிதியைப் பொறுத்த வரை பலன்கள் கலந்து காணப்படும். பண வரவை விட செலவு அதிகமாக இருக்கும்.

உங்கள் துணையின் உடல் நிலை பற்றிய கவலை காணப்படும்.

## கன்னி

இன்று பலன்கள் கலந்து காணப்படும். எந்த செயலையும் செய்வதற்கு முன்பு யோசித்து செய்வது நல்லது. உங்கள் தொடர்பாடல் திறமையில் கவனம் தேவை.

இன்றைய பணிகளில் சவால்கள் நிறைந்திருக்கும் என்பதால் நீங்கள் பணிகளை முடிப்பதில் மும்மரமாக இருப்பீர்கள். நீங்கள் உங்கள் பணிகளை புத்திசாலித்தனமாக முடிக்க அனைத்து முயற்சிகளையும் எடுப்பீர்கள்.

குடும்பத்தில் பொதுவாக மகிழ்ச்சி காணப்படும். உங்கள் பேச்சு சிறிது கடுமையாக இருக்கும். எனவே பேச்சில் கவனம் தேவை.

பண வரவு சிறப்பாக இருக்கும். அனால் குடும்பத்திற்கென்று நீங்கள் செலவு செய்வீர்கள். செலவுகள் அதிகம் என்பதால் பண வரவை நீங்கள் மகிழ்ச்சியாக கொண்டாட இயலாது.

## துலாம்

உங்கள் செயல்களை மேற்கொள்ளும்போது உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்த வேண்டும். இன்று பதட்டம் காரணமாக பாதிப்பு ஏற்படும்.

உங்கள் சக பணியாளர்கள் வளர்ச்சி பெற்று முன்னணியில் இருப்பார்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று அன்பிற்கு உகந்த நல்ல அல்ல. உங்கள் துணையின் தேவையை புரிந்து கவனம் எடுத்து நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

இன்று பண வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். பணப் பரிவர்த்தனைகளுக்கான ஆவணம் பராமரிக்க வேண்டும்.

செரிமானப் பிரச்சினைகள் ஏற்படும் என்பதால் உணவில் கவனம் தேவை. ஆரோக்கியத்தில் கவனம் மேற்கொள்ளுங்கள்.

## விருச்சிகம்

உங்கள் தாயின் ஆதரவு உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். இன்று நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். பொறுமையாக இருக்க வேண்டும். நீங்கள் காயமடைய வாய்ப்புள்ளது என்பதால் கவனமாக இருங்கள்.

இன்று நீங்கள் பணிகளை முடிக்க அதிக முயற்சி எடுக்க வேண்டும். உங்கள் பணிகளை முடிப்பது கடினமாக உணர்வீர்கள். உங்கள் பணிகளை திட்டமிட்டு மேற்கொள்வது நல்லது.

அன்பு மற்றும் சுப நிகழ்சிகளுக்கு இன்று மகிழ்சிகரமான நாளாக அமையாது. பொதுவாக இன்று திருப்தி காணப்படாது.

நிதி வளர்ச்சி இன்று குறைந்து காணப்படும். இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் -27.09.2023




இன்று பலன்கள் கலந்து காணப்படும். பூர்வீகச் சொத்து மூலமாக பணம் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்கள் செயல்களை கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் கடினமான முயற்சி மூலம் பணியில் வளர்ச்சி காண்பீர்கள். உங்கள் பணியின்போது சிறு தடைகளை சந்திப்பீர்கள்.

குடும்ப உறுப்பினர்களிடம் சிறிது அனுசரித்து நடந்து கொள்ளுங்கள். உங்கள் உடன் பிறந்தோரிடம் சூடான வாக்கு வாதம் ஏற்பட வாய்ப்புள்ளது.

நிதி வளர்ச்சி பொதுவாக சிறப்பாக இருக்கும். காப்பீடு மற்றும் கடன் வகையில் பணம் கிடைக்க வாய்ப்புள் ளது.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது.உங்கள் பணிகளை சிறப்பாக ஆற்று வீர்கள்.




நீங்கள் அடிக்கடி பயணம் செய்ய நேரும். சில விஷயங்கள் தோன்றி உங்களுக்கு கவலை ஏற்படுத்தும்.

உங்கள் பணிகளை மேற்கொள் ளும்போது சில தடைகளை சந்திப்பீர்கள். பணியிடத்தில் அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்காது.

புரிந்துணர்வில் இருக்கும் பிரச்சினை காரணமாக பெரியவர்களுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

பண வரவிற்கு இன்றைய நாள் சாதகமாக இருக்காது. இன்று கடன் பிரச்சினையா ல் அவதிப்பட நேரலாம். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

சளி மற்றும் செரிமானம் சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படும். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று புதிய தொடர்புகள் கிடைக்கும். அவர்கள் உங்கள் முன்னேற்றத்தி-ற்கு ஆதரவாக இருப்பார்கள். நீங்கள் பொதுக் கூடங்களில் கலந்து கொள் வீர்கள்.

பணியிடத்தில் அனுசரித்து செல்வ தன் மூலம் முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும். உங்கள் பணி தொடர்பான பயணம் காணப்படும்.

குடும்பத்தில் திருப்தி காணப்படும். சுப நிகழ்சிகள் நடக்கக் காண்பீர்கள்.

நிதி வளர்ச்சி இன்று சிறப்பாக இருக்கும். நீங்கள் சிறிது பணம் சேமிக்கவும் செய்வீர்கள்.

வாழ்வில் காணப்படும் அமைதி மற்றும் ஸ்திரத் தன்மை காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல. தியானம் மற்றும் யோகா உங்களுக்கு சிறந்த ஆறுதலை அளிக்கும்.

இன்று பணியில் சுமாரான வளர்ச்சி காணப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது.

குடும்பத்தில் புரிந்துணர்வு குறைந்து காணப்படும். உங்கள் பிரியமானவர்களுக்காக சிறிது நேரம் ஒதுக்குங்கள்.

பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




